**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை 2019 – தேனி மாவட்டம் – ஆண்டிப்பட்டி வட்டம் – திம்மரசநாயக்கனூர் பிட் 1 கிராமம் – வைகை அணையிலிருந்து 58–ம் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டது மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் – தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் ஏற்பட்டது – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.3,20,825/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.808** **நாள் 30.12.2020**

**சார்வரி, மார்கழி 15,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.380, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே.3(2)] துறை, நாள் 27.10.2015.
2. மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களின் கடித ந.க.எண்.25343/பே.மே./2019, நாள் 26.12.2019,
3. மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் கடித எண்.ந.க.பே.மே./24185/2019, நாள் 26.12.2019.
4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.இ.இ.1(3)/142/2020, நாள் 04.06.2020

*******

**ஆணை:**

பார்வை 4–ல் காணும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் தனது கடிதத்தில், தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், திம்மரச நாயக்கனூர் பிட் 1 கிராமத்தில் வைகை அணையிலிருந்து 58–ம் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டதில், 06.12.2019 அன்று கால்வாயில் உடைப்பு ஏற்பட்டு கால்வாய் நீர் புன்செய் நிலங்களில் பாய்ந்து தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததாக தெரிவித்துள்ளார். மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2019 காலத்தில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கனமழை காரணமாக, தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததாகவும், அதில் சுரைக்காய், மொச்சை, வெங்காயம், காய்கறிகள் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், தேனி மற்றும் விழுப்புரம் மாவட்டம் ஆட்சியர்கள், தங்கள் மாவட்டங்களில் 33% மேல் பாதிக்கப்பட்ட புலங்களை வருவாய்த்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையினர் ஆய்வு செய்து உரிய படிவத்தில் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களின் விவரங்களை பின்வருமாறு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்:–

| வ. எண். | பயிரிடப்பட்டப் பயிர்கள் | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட பரப்பளவு (ஹெக்டேர்) | மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் (ஹெக்டேருக்கு ரூ.7,410 வீதம்) வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| தேனி மாவட்டம் | | | | |
| 1. | சுரைக்காய் | 1 | 0.61 | 4520 |
| 2. | மொச்சை | 1 | 1.585 | 11745 |
| **கூடுதல்** | | **2** | **2.195** | **16265** |
| விழுப்புரம் மாவட்டம் | | | | |
| 1 | வெங்காயம் | 37 | 12.92 | 174420 |
| 2. | Gourds | 10 | 3.7 | 49950 |
| 3. | காய்கறிகள் | 6 | 5.94 | 80190 |
| **கூடுதல்** | | **53** | **22.56** | **304560** |
| **மொத்தம்** | | **55** | **24.755** | **3,20,825** |

மேற்கண்ட விவரங்களின்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.16265/– (ரூபாய் பதினாறாயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து மட்டும்) வழங்குமாறு தேனி மாவட்ட ஆட்சியரும் மற்றும் ரூ.3,04,560 (ரூபாய் மூன்று லட்சத்து நான்காயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) வழங்குமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சியரும் கோரியுள்ளார்கள். மேற்கண்டவாறு கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.3,20,825/– (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரத்து எண்ணூற்று இருபத்து ஐந்து மட்டும்) வழங்குமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் தனது பரிந்துரையை செய்துள்ளார்.

2. மேலும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் தனது செயற்குறிப்பில் மேற்காணும் தேனி மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்களின் முன்மொழிவுகள் மற்றும் அதன் மீதான தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் பிரிந்துரை ஆகியவற்றை அரசாணை (நிலை) எண்.380, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே.3(2)] துறை, நாள் 27.10.2015–ல் ஏற்படுத்தப்பட்ட, பேரிடர் நிவாரண நிதிக்கான நெறிமுறைகளின் படி பரிசீலனை செய்யப்பட்டது. மேற்காணும் அரசாணையின் பிற்சேர்க்கை வரிசை எண்.5B(a) படி வேளாண்மை, தோட்டக் கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7410/–வீதம் நிவராணத் தொகையாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் அதனை ஏற்று, தேனி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2019 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட்ட விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.3,20,825 (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரத்து

எண்ணூற்று இருபத்து ஐந்து மட்டும்) வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 வெள்ளம், புயல் முதலியவை – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – BH வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சேதமுற்றதற்கு உழவர்களுக்கு நிவாரண நடவடிக்கைள் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்."**
**(பழைய த.தொ.கு 2245 02 800 BH – 1114)**
**(IFHRMS த.தொ.கு 2245 02 800 BH 31101)**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.3,20,825–க்கான செலவினம் 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020–2021–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது கருத்துருவை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.47116/வருவாய்/2020, நாள் 28.12.2020–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 1296 (ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்றாறு) –இன்படியும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அதுல்ய மிஸ்ரா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**<u>பெறுநர்</u>**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600009.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600005.
மாவட்ட ஆட்சியர், தேனி மற்றும் விழுப்புரம்.
மாவட்ட கருவூல அலுவலர், தேனி மற்றும் விழுப்புரம்.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**<u>நகல்</u>**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600009.

கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம்,
சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/ வ.வ.–1) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு–II) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**அரசு சார்புச் செயலாளர்**